தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1971 அக்டோபர் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

கோயம்புத்தூர் நகரில் மத்திய பேருந்து நிலையம்

*31 வினா.—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் மத்திய பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, கோவையில் ஒவ்வொரு ஊருக்குச் செல்கிற பஸ்களின் ஸ்டாண்டு ஒவ்வொரு இடத்தில் இருக்கிறது. ஆகவே, கோவையில் ஒரு மத்திய பேருந்து நிலையம் வைத்தால் மக்கள் போக்கு வரத்துக்கு மிகச் சௌகரியமாக இருக்கும். இனிமேலாவது அரசு இந்தத் துறையில் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கோவை நகரில் மத்திய பேருந்து நிலையம் கட்டுவதற்குப் புதிய செயற்குறிப்பு இல்லை. ஆனால், ஏற்கனவே செயற்குறிப்பு இருந்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, பேருந்து நிலையம் இரண்டு கட்டத்தில் கட்டி முடிப்பதாக முடிவு எடுக்கப்பட்டு, முதல் கட்டமாக 1 முதல் 3 மேடைத் தளங்களும், சுகாதார வசதிகள், பயணச் சீட்டுக்கு முன்னதாகப் பதிவு செய்துகொள்ளும் அலுவலகம் உட்பட வண்டி நிற்பதற்கான 23 இடங்களும் அமைக்கும் பணி அடங்கும். இதற்காக ரூ. 5.8 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் இப்பணி ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. அது, பிழைகள் காரணமாகவும் வேறு பல குறைபாடுகளின் காரணமாகவும் இடையில் நிறுத்தப்படும்படியாக ஆகிவிட்டது. மேற்கொண்டு விலைவாசி உயர்ந்து விட்டதன் காரணமாக அந்தத் தொகையை உயர்த்திக் கொடுத்தால்தான் கட்ட முடியும் என்று கடிதப்போக்குவரத்து இருந்ததற்குப் பிறகு இப்பொழுது ஓரளவு தீர்வு காணப்பட்டது. தீர்வு காணப்பட்டதற்குப் பிறகு, உருக்கு அவர்களுக்குக் கிடைக்கவில்லை, உருக்கை வாங்கித்தரும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். அதற்குப்பிறகு,

இந்துஸ்தான் உருக்குத் தயாரிப்பு நிறுவனத்திடம் 126 டன் உருக்கிற்குத் தேவைக் குறிப்பு ஒன்று அரசாங்கம் கொடுத்து, 46 டன் உருக்கு வழங்க அந்த நிறுவனம் ஒப்புதல் அளித்திருக்கிறது. இப்பொழுது வேலை ஓரளவு தொடங்கப்பட்டு வருகிறது. அது ஓரளவுக்கு விரைவிலே கட்டி முடிக்கப்படும். இது முதல் கட்டத்தைப் பொருத்தது.

முக்கியக் கட்டடம், சிற்றுண்டி விடுதிகள், கடைகள், தங்கும் அறைகள், நான்காவது மேடைத் தளம் ஆகியவை இரண்டாம் நிலைப் பணியில் அடங்கும். இதற்கு மதிப்பீட்டுச் செலவு ரூ. 4.6 லட்சமாகும். இது ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மத்திய பேருந்து நிலையத்திற்கான முக்கிய கட்டடம், கான்க்ரீட் கம்பங்கள் நீங்கலாக, அடித்தளம் வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதற்கும் உருக்குத் தட்டுபாடு இருப்பதால் உருக்கு வேண்டும் என்று கேட்டார்கள். இந்துஸ்தான் உருக்குத் தயாரிப்பு நிறுவனம் 46 டன் உருக்கு ஒதுக்கியுள்ளது. ஒதுக்கப்பட்ட 46 டன் உருக்கிலும்கூட 8 மி. மீட்டர் அளவு கொண்ட உருக்கு 16 டன் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. பிற அளவுகளிலான உருக்குகள் இந்துஸ்தான் உருக்கு சேமிப்புக் கிடங்கில் இருப்பில் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது கைவசம் இல்லை யென்றும் விரைவில் தருவதாகவும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, விரைவில் வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிற நிலையில் வேலைகள் மேலும் துவங்கப்படும். ஆக, இரண்டு கட்டடங்களில் வேலை துவங்கப்பட்டது. உருக்கு கிடைக்காத காரணத்தால் சற்று காலதாமதம் ஆகியிருக்கிறது. விரைவிலே அது கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, கோவையில் அரசுப் பேருந்து நிலையம் காந்திபுரத்தில் இருப்பதால்—அது நகரத்திலிருந்து மிகத் தொலைவில் இருப்பதால்—பிரயாணிகளுக்கு மிகவும் தொல்லை ஏற்படுகிறது. அரசுப் பேருந்து வண்டிகள் புகைவண்டி நிலையத்தின் வழியாகச் செல்ல அரசு ஏற்பாடு செய்தால் சௌகரியமாக இருக்கும். ஆகவே, இந்த வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவைகளெல்லாம் செயற்குறிப்பு தீட்டுவதற்கு முன்பே சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். ஆகவே, எல்லாக் கட்டங்களையும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்து, அடித்தளம் போட்டதற்குப் பிறகு, இனி இந்தப் பேருந்து நிலையத்தை மாற்றி, பெருஞ்செலவுக்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படாது.

திரு. சு. துரைசாமி : கோவையில் கட்டப்படவிருக்கிற பேருந்து நிலையத்தில் எத்தனை பஸ்கள் தங்கக்கூடும், இப்பொழுது கோவைக்கு வந்து செல்லுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையெல்லாம் கணக்கிட்டு அந்தப் பேருந்து நிலையம் கட்டப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதல் கட்டமாக 23 பேருந்துகள் தங்கும் அளவுக்குப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்ட பின், இரண்டாம் கட்டமாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் மூலம் ஓரளவுக்கு அதிக பஸ்கள் நிற்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆனால், எத்தனை பேருந்துகள் வருகின்றன என்பதைப் பொறுத்த வரையில், நகரத்தின் தேவையைக் கணக்கிட்டுதான் இரண்டு கட்டப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.